
உ





# சேவைகள் பணிகள்

# சந்நிதியான் ஆச்சிரமம்




## பாகம்-02

(2008 தொடக்கம் 2011 வரை)

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# முகவுரை

திருவருளும், திருவழகும் நிறைந்து நித்தியானந்தமாகத் திகழும் செல்வச் சந்நிதியானுடைய திருத்தலச் சூழலிலே முருகப்பெருமானுடைய திருவருட் திறத்தின் பேறாக விளங்கி வரும் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றி வருகின்ற பணிகள் யாவருமறிந்ததே.

எம் பெருமானாம் சந்நிதியானுடைய அருட்பெருங் கருணையை அறிந்தும், அனுபவித்தும் வருகின்ற அடியவர்களின் ஆன்மீகவுணர்வு ததும்பிய எதிர் பார்ப்புகளையெல்லாம் அள்ளி வழங்கி வருகின்ற ஒரு நிறுவனமாக சந்நிதியான் ஆச்சிரமம் செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டு வருகின்ற பணிகளுக்கெல்லாம் மூலமாகவும், ஆதாரமாகவும் அமைந்தருள் பாலிப்பது செல்வச்சந்நிதியானுடைய வழிகாட்டுதலுடனமைந்த திருவருட் கடாட்சமேயாகும்.

ஆச்சிரமத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பணிகளைப் பொறுத்தவரையில் அன்னதான சேவையுடன் ஆரம்பித்த செயற்பாடு இன்று..... ஆன்மீகத் துறை சார்ந்த பணிகளோடு கல்விப்பணி, கலைப்பணி மற்றும் உணவுப் பொருள் விநியோகம், வறுமை நிவாரண உதவிகள், மருத்துவம் என்றவாறு பன்முகச் சமுதாயப் பணிகளையும் கால அட்டவணைப் பிரகாரம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்தகைய சேவைகளையெல்லாம் செவ்வனே நிறைவேற்றி வருவதோடு, நித்தியமான ஆன்மீகக் கருமங்களுக்கப்பால் நகர்ந்து ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்புக்களைக் கொண்ட சமய, சமூக நிறுவனமாக சந்நிதியான் ஆச்சிரமம் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு ஒரு ஆன்மீக நிறுவனமாக செயற்படுத்தி வருங் காரியங்களையெல்லாம் ஒரு பதிப்பாக வெளியிடுவதற்கான தேவைப்பாடுகளைப் பொறுத்தவரையில் முதலாவதாகக் கருதக்கூடியது யாதெனில்-

*ஆன்மீக நெறி நின்று ஆற்றக்கூடியதும் அதன்மூலம் ஏனைய நிறுவனங் களுக்கு ஒரு வழிகாட்டுதலுமாக அமையக்கூடிய வகையில் இது அமையலாம் என்ற எதிர்பார்ப்புடன் இந்தப் பதிப்பு வெளியிடப்படுவது அவசியமாகிறது.

*இரண்டாவதாகக் கருதக்கூடிய விடயம்-

எமது எதிர்காலச் சந்ததியினரிடையே ஆன்மீக வழிப்படுத்தலையும், ஆன்மீக நெறிநின்று செய்யக்கூடிய சேவைகளையும் இனங்காணச் செய்வதற்கும் இந்த வெளியீடு அவசியமாக அமையலாம்.

மேற் கூறிய காரணங்களோடு- சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்படும் "ஆச்சிரமத்தின் சேவைகள் பணிகள்" பற்றிய இந்தப் பதிப்பு நிறுவன ரீதியாக வளர்ச்சியடைந்து வரும் ஆச்சிரமத்தின் சேவைகளை "ஆவணப்படுத்துதல்" என்ற தேவைப் பாட்டையும் பூர்த்தி செய்வதாக அமைந்திருக்கும் என்பதோடு ஆச்சிரமத் தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேவைகள் தொடர்பாக வெளியிடப்படும் இந்தப் பதிப்பின்மூலம் பொருளாதார வளம் படைத்த மக்களிடையே தர்ம சிந்தனையைத் தூண்டவும், பல்வேறு சூழ்நிலைகளாலும் ஏதிலிகளாக மாற்றப்பட்டுள்ள எமது உடன் பிறப்புகளின் துன்ப துயரங்களுக்கு தோன்றாத் துணையாக அமைந்து ஒரு ஆற்றுப்படுத்தலை உருவாக்கவும் முடியும்.

எம் பெருமானாம் செல்வச்சந்நிதி வேலவனுடைய திவ்விய பிரசன்னத்துடன் செயற்பட்டு வரும் ஆச்சிரமத்தின் செயற்பாடுகள் யாவும் அற்புதம் நிறைந்தவை. பேரானந்த அனுபவத்தை ஏற்படுத்துபவை.

அந்த வகையில் ஆச்சிரமத்தின் செயற்பாடுகளை மிகுந்த அனுபவங்களோடு ஆற்றிவரும் மோகன் சுவாமிகளும் காலத்தின் தேவையறிந்து, ஆன்மீக வழியூடாக சமுதாய சேவைகளை வழிநடத்திச் செல்வதில் நிகரற்றவர். இத்தகைய அனுபவங்களையும் வழிப்படுத்தல்களையும் ஒரு முகப்படுத்தி சந்நிதி வேலவனின் திருவருளையே சான்றாதாரமாகக் கொண்டு வெளிவரும் "ஆச்சிரமத்தின் சேவைகள் பணிகள்" என்ற இந்தப் பதிப்பு ஆனந்த அனுபவங்களின் வெளிப்பாடாகும்.

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றுப் பற்றத் தலைப்படுந்தானே"

-திருமந்திரம்-

-துரை. கணேசமூர்த்தி-

உ

# அணிந்துரை

சமயங்கள் நிறுவன மயப்படுத்தப்பெற்று, அந்த நிறுவனங்களுக்கூடாகத் தம சமயங்களின் வளர்ச்சியில் குறிப்பிட்ட சில சமயங்கள் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகின்றன. சமுதாயத்தில் ஏழைகள், வறியவர்கள், நொந்துபோனவர்களை அணுகி, அவர்களின் பலவீனத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தமது மதங்களை மேலும் வளர்த்துக் கொண்டு வருகின்றன. இந்த நாட்டில் கடந்த காலத்தில் நிகழ்ந்த கொடிய போரினால் அவலத்தை அனுபவித்த மக்கள் மத்தியில் இன்று சாதுரியமாக வேரூன்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்து மதம் தனது வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு எக்காலத்திலேனும், செயற்பட்டு வந்திருப்பதாகக் குறிப்பிடுவதற்கில்லை. தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கிய காலகட்டத்தில் சமண, பௌத்த மதங்களின் பாதிப்புக்கு எதிராகத் தனது பாதுகாப்புக் கருதிச் செயற்பட்டு வந்திருக்கின்றது. அந்தக் காலகட்டத்திலேயே, கலைகள் இந்து ஆலயங்களின் செயற்பாட்டுடன் இணைக்கப்பெற்றன. அப்பொழுதும் நிறுவன மயப்பட்ட ஒரு செயற்பாடாக இருந்து வரவில்லை. இந்து மதத்துக்குரிய நிறுவனங்களாகத் தமிழ் நாட்டில் இருப்பவை ஆதீனங்கள். அவையாவும் பெரும்பாலும் சனாதன தர்மத்தைக் கட்டிக்காத்துக் கொண்டிருக்கும் கோட்டைகளாகவே இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த ஆதீனங்கள் ஆகம முறைப்பட்ட வழிபாட்டு முறைமைகளையே இன்றும் பேணிவருகின்றன. பாமர மக்களான சாதாரண ஏழை எளிய மக்களுக்கும், ஆதீனங்கள் நெறிப்படுத்தும் மத வழிபாட்டுக்கும் நெருக்கமான உறவேதுமில்லை.

சாதாரண மக்களின் தெய்வ வழிபாடு "சிறுதெய்வ வழிபாடு" என ஆகமக்காரர் இழிவாக நோக்குவர். சிறு தெய்வ வழிபாட்டுக்குள் வராத தெய்வம் முருகன். ஆனால் சிறு தெய்வவழிபாட்டு முறைமையைப் பின்பற்றி, வாய்கட்டிச் செய்யும்பூசை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகனுக்கும், கதிர்காமக் கந்தனுக்கும் நடைபெற்று வருகின்றது. இந்தப் பூசை முறையானது, இந்த ஆலயங்கள் சாதாரண மக்கள் மயப்பட்டவை என்பதன் வெளிப்பாடாகவே விளங்கிக்கொள்ள முடிகின்றது.

சந்நிதி முருகப்பெருமானுக்கு "அன்னதானக் கந்தன்" என்னும் சிறப்புப் பெயர் வழக்கில் உண்டு. நெருக்கடிகள் மிகுந்த கடந்த காலத்திலும் அன்னதானப்பணி தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றது.

சந்நிதியான் ஆலயச் சூழலில் அன்னப்பணியினை நித்தமும் முட்டின்றிச் செய்துவரும் "அமுதசுரபி"யாக விளங்குவது சந்நிதியான் ஆச்சிரமம். மக்கள் மயப்பட்ட பல்வேறு அரும்பணிகளை இந்த ஆச்சிரமம் ஆற்றி வருகின்றது. உடல்பணி, அறிவுப்பணி, சமூகப்பணி என ஆச்சிரமத்தின் பணிகள் பரந்த அளவில் நடைபெற்று வருகின்றன. இல்லாதார் பசிப்பிணியைத் தினமும் போக்கி, வாரத்தில் வெள்ளிதோறும், விஷேட மகோற்சவ காலங்களிலும் இந்தப் பெரும்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஆச்சிரமம் ஆற்றிவரும் பிரதான பணிகளில் ஒன்று அறிவுப்பணி; ஆன்மீகப்பணி. பிரதிமாதமும் வெள்ளிக்கிழமைதோறும், "சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை", "ஞானச்சுடர்" என்னும் மாசிகையை வெளியிட்டு வருகின்றது.

இந்தச் சஞ்சிகை வெளியீடு விஷேட நிகழ்வாக ஆச்சிரமத்தில் நடைபெற்று வருவதுடன், இந்த நிகழ்வினைத் தகுந்த களமாகக் கொண்டு சமூகப்பணிகள் பல அப்பொழுது இடம்பெற்று வருகின்றன. சமய வழிபாடுகள், நாயன்மார் குருபூசைகள், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு உதவுதல், சுயதொழில் முயற்சிக்கான உதவிகள், வைத்திய சேவைகள், ஏழைகள் அற்றம் மறைக்க உடுதுணி வழங்குதல், கல்விச் செயற்பாட்டு உதவிகள், கலை, இலக்கியப் பணிகள், பெரியோரைக் கௌரவித்தல் இன்ன பல அரும்பணிகளைச் சந்நிதியான் ஆச்சிரமம் குறைவின்றிச் செய்து வருகின்றது. நிறுவனமயப்பட்டவர்களாலும் இத்தனை பணிகளைச் செய்து முடிக்க இயலாது என்பது உண்மை.

இப்பணிகளையெல்லாம் உதவி தேவைப்படும் மக்களுக்குத் தொடர்ந்து செய்து வருவதற்கு வேண்டிய நிதி, "எவ்வாறு கிடைக்கின்றது?" எனச் சுவாமி அவர்களிடம் வினாவினால், "முருகன் தருகின்றான்" எனச் சுருக்கமாகக் கூறுகின்றார்கள். முருகன் குறைவின்றித் தந்து கொண்டிருக்கின்றான். முருகன் யாருக்காகத் தந்துகொண்டிருக்கின்றானோ, அவர்களுக்கு அந்த நிதியோய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றது என்பதனை ஆவணப் பதிவாகத் தருகின்றது இந்த நூல்.

சந்நிதியான் ஆச்சிரம நிகழ்வுகளின் நிழலான நிஜம் இந்தத் தொகுப்பு. எத்துணை ஆற்றல் மிக்க எழுத்தினாலும் சொல்ல முடியாத செய்திகளைத் தொகுப்பாக வெளிவருகின்ற இந்த நூல் பேசும்; உள்ளங்களில் உணர்த்தும். இந்த மலரினைக் கரங்களில் ஏந்தும் அன்பர்கள், சுவாமி அவர்களின் புனிதமான பெரும்பணிக்கு அள்ளி அள்ளி வழங்க, சந்நிதி முருகப்பெருமான் என்றென்றும் பேரருள் புரிவானாக!.

27.01.2012. -தெணியான்.

உ

# அன்பான வாசகர்கட்கு

"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்றும், "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்றும் அன்றும் இன்றும் மக்கள் பணியாற்றிவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சேவைகள், பணிகள் அனைத்தையும் சந்நிதி முருகனின் திருப்பாதங்களில் காணிக்கை யாக்குகின்றோம். இந்த வாசகம் படத்தொகுப்பு- I வெளியாகிய புத்தகத்தின் முகவுரையில் கூறப்பட்டுள்ள வாசகம். அதையே நாம் தொகுப்பு- II வெளிவரும் இந்நாளில் முதலுரையும் முகவுரையுமாக மீண்டும் வாசகர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

2009இல் தோற்றம்- வளர்ச்சி- பணிகள் பற்றி கறுப்பு- வெள்ளை புகைப்படங்களுடன் கூடிய படத்தொகுப்பு பாகம்1 வெளியாகியது. அதன் தொடர்ச்சியாக இன்று (05.02.2012) ஞானச்சுடர் 169ஆவது மலர் வெளியீடு நடைபெறும் இந்நாளில் இணைந்தபடி, சுருக்கமான குறிப்புக்களுடனும் வர்ணப்படங்களுடனுமான பாகம் 11 வெளியாகிறது.

"சந்நிதியான் ஆச்சிரமம்" ஒரு திறந்த புத்தகம். இங்கே மூடு மந்திரம் எதுவுமில்லை. ஆற்றப்படும் சேவைகள்- பணிகள் அனைவரும் அறிந்தது. எனினும், அறிந்து கொண்டவர்களைத் தவிர்த்து, இன்னமும் அறியாத பலருக்காகவும் இத்தகைய தொகுப்புக்களும் வெளியீடுகளும் அவசியமாகிறது என்பதே சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பணிவன்பான கருத்தாகும்.

எங்கும்- எல்லாமுமாகி நிற்கும் முருகப்பெருமான் திருப்பாதங்களை வணங்கி, நகமும் தசையுமாகவிருந்து ஆச்சிரமத்துப் பணிகளை ஒன்றிணைத்து- ஒருங்கமைத்து வழிநடத்திவரும் ஆச்சிரமத்து சுவாமிகளின் நல்லாசிகளுடன் இத்தொகுப்பு உங்கள் கைகளில் மலர்கிறது.

அனைவருக்கும் அனைத்தும்கிட்ட முருகன்
நல்லருள் கிட்டுவதாக.

செல்வச்சந்நிதி,
05.02.2012.

சைவ கலை பண்பாட்டுப் பேரவை,
சந்நிதியான் ஆச்சிரமம்.

உ

# மன அழுக்கை நீக்கும் கருத்துக்களை அள்ளி வழங்கும் ஆத்மீக சஞ்சிகை

## ஞானச்சுடர் ஆண்டு மலர் விழாவில் புகழுரை

மனித மனத்தில் உள்ள மன அழுக்கைப் போக்கும் கருத்துக்களை வழங்கி மனித உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி ஞானத்தை உருவாக்கும் பணியில் ஞானச்சுடர் ஆத்மீக சஞ்சிகை சிறப்பாகச் செயற்படுகிறது. இவ்வாறு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியரும், சிறந்த சமய சொற்பொழிவாளருமான ஆ. சிவநாதன் தெரிவித்தார்.

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த சஞ்சிகையான ஞானச்சுடர் ஆத்மீக சஞ்சிகையின் ஏழாவது ஆண்டு மலர் வெளியீட்டுவிழா சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவை நிர்வாக உறுப்பினர்களின் ஒருவரும் அதிபருமான ந. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இவ்வெளியீட்டு விழாவில் ஆசிரியர் ஆ. சிவநாதன் ஞானச்சுடர் ஆண்டு மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில், "ஒவ்வொரு மனிதனின் பக்குவத்திற்கு ஏற்ற அவனது உள்ளத்தில் ஒளியேற்ற ஞானச்சுடர் வழிசமைத்துள்ளது. ஆற்றங்கரை முருகன் குருவாக இருந்து தத்துவங்களை எடுத்தியம்பும் வகையில் இச்சஞ்சிகை அமைந்துள்ளது. ஒவ்வொரு பிரதி ஞானச்சுடரும் முருகனின் விபூதி பிரசாதத்துடன் வருவதிலிருந்து இதை உணர்ந்து கொள்ளலாம். இச்சஞ்சிகையைப் படிக்கும்போது உயர்ந்த சிந்தனைகளை சிந்திக்க வாய்ப்புக் கிடைக்கின்றது. இச்சிந்தனைமூலம் மனித வாழ்வின் நோக்கத்தை அடைய வழிகாட்டப்படுகின்றது" என்றார்.

அதிபர் ந. அரியரத்தினம் தன் தலைமையுரையில் கூறியதாவது, கடந்த 1998ஆம் ஆண்டு தைமாதம் ஞானச்சுடர் ஆத்மீக சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீட்டு விழாவில் பேசிய உதயன் நாளிதழின் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் "இம்மண்ணில் இன்று ஆத்மீக சஞ்சிகை வெளியிடப்படுகிறது. இந்த ஓராத்மீக சஞ்சிகை போதாது. நூறு ஆத்மீக சஞ்சிகைகள் வெளிவரவேண்டும். ஆத்மீக தத்துவங்களை மக்கள் உள்ளத்தில் ஆழமாகப் புகுத்தவேண்டும்" எனக் கூறினார். அன்று அவர் கூறிய கருத்துக்கள் ஏழு ஆண்டுகள் கடந்த பின்னும் இன்று பொருத்தமானவை. இளம் சமுதாயத்தினருக்கு ஆத்மீகத்தை ஏற்படுத்த அத்திவாரம் இடப்படவேண்டும் என்றார்.

"ஞானச்சுடர்" சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்ட (1998) காலம் தொடக்கம் இன்றுவரை ஆக்கங்களை எழுதி உதவிய அனைத்து ஆத்மீக எழுத்தாளர்களுக்கும் ஆசிரியர் ஆ. சிவநாதன் பொன்னாடை போர்த்து கௌரவித்தார். உதயன் பிரதம ஆசிரியர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

14.02.2004 உதயன்

## சந்நிதியில் கார்த்திகைத் திருவிழா:

செல்வச்சந்நிதி- ஆலயத்தில் கடந்த நான்கு வருட காலமாக மாதந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தன்று சந்நிதி முருகனுக்கு உற்சவ வழிபாடு நடைபெறுவதற்கு மூலகாரணமாக விளங்கிய பெருந்தகை அமரர் தியாகராசா மகேஸ்வரன் ஆவார். அவரின் ஞாபகமாக சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வருட முதல் மாதத்தில் (தை) இடம்பெறும் கார்த்திகை உற்சவத்தில் சந்நிதி வேலவன் பூந்தண்டிகையில் வீதிஉலா வரும் காட்சியினை இங்கு காண்கிறீர்கள்.

## திருவாசக விழா:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் நடாத்தப்படும் வருடாந்த திருவாசக விழா 06.01.2012 வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது. செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடந்த விஷேட பூசை- வழிபாடுகளைத் தொடர்ந்து, ஆலயத்திலிருந்த நால்வர் திருவுருவப் படமும்- திருவாசக ஏடுகளும் திருவாசக பாராயணத்துடன் ஊர்வலமாக ஆச்சிரமத்திற்கு எடுத்துவரப்பட்டது.

நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரையுடன் ஆரம்பமான அவ்விழாவில், மறவனூர் T.M. வாசகர் குழுவினரின் மங்கல இசையைத் தொடர்ந்து பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## முருக பஜனை:

1992ஆம் ஆண்டு தொடக்கம் பிரதி வெள்ளிதோறும் இடம்பெற்றுவரும் வாராந்த நிகழ்வுகள் எவ்வித இடர்பாடுகளுமின்றி நடைபெற்று வருவதற்கு சந்நிதி வேற்பெருமான் மூலகாரணமாக விளங்குவதையிட்டு ஆச்சிரம சுவாமிகள் வருடத்தின் இறுதி வெள்ளிக்கிழமை முருகனடியார்களோடு சேர்ந்து முருகநாம பஜனை செய்து வருவது வழமை. சுவாமி அவர்கள் பஜனை செய்யும் நிகழ்வானது பஜனையில் ஈடுபடும் அன்பர்களுக்கெல்லாம் பக்திப் பரவசத்தை ஊட்டிவிடும் நிகழ்வு என்றே சொல்லலாம். ஞானச்சுடர் மலர் வெளியிடப்பட்ட காலம் தொடக்கம் பஜனை நிகழ்வானது வருட இறுதி வெள்ளிக்கு முதல் வெள்ளியன்று நடைபெறுவது வழமை. சுவாமி அவர்கள் பக்கவாத்திய சகிதம் தமது வெண்கலக் குரலில் முருகன் நாமம் இசைப்பதும் மண்டபம் நிறைந்த கூட்டத்தினர் ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்து பஜனையினை ரசிப்பதும் அற்புதமான காட்சியாகும்.

## அறுபத்துமூவர் குருபூசை:

ஒவ்வொரு வெள்ளியன்றும் இடம்பெறும் வாராந்த நிகழ்வின் பின், ஆச்சிரம வளாகத்தினுள்ளே உள்ள தவத்திரு வே. முருகேசு சுவாமிகள் ஞாபகார்த்த மண்டபத்தில் அறுபத்துமூவர் குருபூசை நிகழ்வு நடைபெறுவது வழமையானது. இத்தினத்தில் அறுபத்து மூவருடன் முருகப்பெருமானும் ஒருவராக- மொத்தம் 64 பேரை மண்டபத்திலமாத்தி-

அன்னம் படைத்து, தெட்சணை வைத்து, தீபம் காட்டி வழிபாடியற்றி அன்றைய அன்னப்பணி ஆரம்பமாகிறது. அம் மண்டபத்தில் அமர்ந்திருக்கும் 64 பேருடன் ஆச்சிரம சுவாமிகளும் இணைந்து சிவபுராணம் ஓதும் அரிய நிகழ்வினையே படங்களில் காண்கிறீர்கள். பிறந்த நாள், திருமணநாள், அந்தியேட்டி தினம், உறவுகளின் இறப்பு ஆண்டுப் பூர்த்தி நாள் போன்றவற்றைக் கொண்டாடும் பலரும் இப்போது இக்குருபூசை நிகழ்வினில் பங்குகொள்ள விரும்பி முன்வருவதை அவதானிக்க முடிகிறது.

### கதிர்காம நடைப் பயணம்:

பன்நெடுங் காலமாகவே கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு, செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து பாத யாத்திரை புறப்பட்டுச் செல்வது வழமை. இடைக்காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் ஒருசில ஆண்டுகள் இப் பாதயாத்திரை தடைப்பட்டிருந்தபோதும், மீண்டும் சில ஆண்டுகளாக கதிர்காமக்கந்தன் கொடியேற்றம் காண யாத்திரை நடைபெறுகிறது. கடந்த வருட பாத யாத்திரையில் கலந்துகொண்ட குழுவினர் ஆலய முகப்பில் தயாராவதையும், சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுவாமிகளால் யாத்திரைக் குழுவினர் வரவேற்கப்பட்டு, ஆச்சிரமத்து வழிபாட்டு அறையில் பூசை நிகழ்வினில் கலந்து கொள்கின்றனர்.

பூசை வழிபாடு முடிந்ததும், யாத்திரைக் குழுவினர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக (அவரவர் சொந்த செல்வுக்காக) பணமும் இரண்டு பொதிகளில் உணவுப் பண்டங்களும் கொடுத்து ஆசிகூறி சுவாமிகள் அவர்களை வழி அனுப்பிவைக்கும் காட்சி பார்ப்போரைப் பரவசப்படுத்தும்.

**கிருபானந்த வாரியாரின் உருவச்சிலை**
**சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதிஷ்டை**

திருமுருக கிருபானந்தவாரியாரின் திருவுருவச்சிலை இன்று தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதிஷ்டை செய்யப்பட இருக்கின்றது.

ஐம்பொன்னாலான இந்தச்சிலை 21கி.கிறாம் எடையுடையது. கரம்பனைச் சேர்ந்தவரும், தற்போது லண்டனில் வசித்துவருபவருமான நா. சிவானந்தஜோதி இந்தச் சிலைக்கான நிதியினை வழங்கியுள்ளார். இந்தியாவில் வடிகட்டப்பட்டு லண்டனுக்கு எடுத்துச்செல்லப்பட்ட இந்தச் சிலை அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இன்று முற்பகல் 11மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் விஷேட பூசை நிகழ்வுகளுடன் இந்தச் சிலை பிரதிஷ்டை செய்யப்படவிருக்கின்றது. இதனையொட்டி அங்கு அன்னதான நிகழ்வு இடம்பெறும்.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் உட்பட சமயப் பிரமுகர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொள்கின்றனர். உலக நாடுகள் பலவற்றிலும் சமயப் பிரசங்கம் செய்த கிருபானந்த வாரியார் இந்தியாவில் உள்ள ஆதரவற்ற சைவச் சிறார்களை பராமரிப்பதற்கென சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் ஒவ்வொன்றிற்கும் நிதியுதவி வழங்கி வந்தார். சமயத் தொண்டையும் சமூகத் தொண்டையும் ஒருங்கே செய்துவந்த இவருக்கு இந்தியாவில் மட்டுமல்ல ஈழத்திலும் சைவர்கள் மத்தியில் நன்மதிப்பும் பக்தியும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

**04.07.2004** **உதயன்**



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் நடாத்தப் பட்டுவரும் அமரர் தியாகராசா மகேஸ்வரன் நினைவாக ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம் பெற்று வரும் கார்த்திகை உற்சவத்தின் போது வேற்பெருமான் பூந்தண்டிகையில் எழுந்தருளிவரும் காட்சி.



வருடாந்த திருவாசக விழாவின் போது ஆச்சிரமத்திலிருந்து ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட நால்வர் கொண்ட பீடத்திற்கு பிரதம பூசகர் வி. தெய்வேந்திரம் ஐயர் பஞ்ச தீபம் காட்டும் நிகழ்வு




ஆச்சிரமத்தில் வருடா வருடம் இடம் பெறும் முருக நாம பஜனையின் போது
ஆச்சிரம சுவாமிகளும் அடியார்களும் இணைந்து கொண்ட காட்சி.




முருக நாம பஜனையின் போது கலந்து கொண்ட முருகனடியார்கள்.



ஆச்சிரமத்தில் பிரதிவெள்ளி தோறும் இடம்பெற்று வரும்
63வர் குருபூசையின் போது சுவாமி அவர்களும் அடியார்களும்
ஒன்று கூடி சிவபுராணம் ஓதும் நிகழ்வு.



ஆச்சிரமத்தில் பிரதிவெள்ளி தோறும் இடம்பெற்று வரும் 63வர் குருபூசையின் போது
சுவாமி அவர்களும் அடியார்களும் ஒன்று கூடி சிவபுராணம் ஓதும் நிகழ்வு.



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து வருடா வருடம் இடம் பெற்று வரும் கதிர்காம பாதயாத்திரையில் ஈடுபடும் அடியார்கள் ஆலய முகப்பில்



பாதயாத்திரைக் குழுவினர் ஆச்சிரம பூசை வழிபாட்டில் கலந்து கொள்ளும் நிகழ்வு



ஆச்சிரம பூசை வழிபாட்டின் பின் சுவாமி அவர்கள் பாதயாத்திரையை
நெறிப்படுத்தும் சிவாச்சுவாமி அவர்களிடம் வேலினைக் கையளிக்கும் நிகழ்ச்சி



பாதயாத்திரைக் குழுவினர் ஆச்சிரமத்திலிருந்து
கதிர்காம யாத்திரையின் ஆரம்பம்.



ஆச்சிரமத்தில் இடம் பெறும் வாராந்த நிகழ்வில் சேலத்தில் இருந்து வருகை தந்த சின்மயாமிசன் நிறுவனத்தைச் சார்ந்த சுவாமி கிருஸ்ணானந்தா அவர்கள் சொற்பொழிவு ஆற்றும் நிகழ்வு.




வாராந்த நிகழ்வில் பக்க வாத்திய சகிதம் இன்னிசை வழங்கும் நிகழ்வு.

## வாராந்த நிகழ்வுகள்:

பேரவையினால் நடாத்தப்பட்டுவரும் வாராந்த வெள்ளி நிகழ்வுகளில் பலவிதமான நிகழ்வுகள் இடம்பெறுவது வழமை. அந்நிகழ்வுகளில் மாதம் ஒரு பாடசாலையை சேர்ந்த மாணவர்களை அழைத்து அவர்தம் திறமைகளை வெளிக்கொணர்வதற்குரிய களத்தை அமைத்துக்கொடுப்பதில் பேரவை பெரும் பங்காற்றுகிறது. அத்துடன் இளஞ் சொற்பொழிவாளர்களையும் தேர்ந்தெடுத்து அவர்களது ஆற்றல்களையும் வளர்ப்பதற்குரிய வகையில் செயலாற்றுவது போற்றத்தக்கது.

1999ஆம் ஆண்டு ஞானச்சுடர் மலரில் இடம்பெற்ற வாசகர் உள்ளத்திலிருந்து எழுந்த கருத்தினை இத்துடன் இணைத்துள்ளோம்.

### அன்பர் ஒருவரின் இதயத்திலிருந்து.......

ஐப்பசிமாத ஞானச்சுடர் வெளியீடு பார்ப்பதற்காக இன்று நான் அங்கு வந்தபொழுது நேரம் ஏழு மணியிருக்கும். சந்நிதி கோவிலில் ஐப்பசி வெள்ளி காலைப் பூசையையும் பார்த்து விட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வந்தேன். விழாவும் தொடங்கியது. வெளியீட்டுரையை நிகழ்த்த குறிப்பிட்ட நபர் வராதபடியால் பதில் ஆள் நியமிக்கப்பட்டு வெளியீட்டுரை நிகழ்த்தப்பட்டது. அடுத்து சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கத்தின் மதிப்புரை (ஞானச்சுடர்) நிகழ்வு ஆரம்பமாயின. மடைவெள்ளம் திறந்தாற்போல அவருடைய வாயிலிருந்து ஞானச்சுடர் வார்த்தைகள் வர ஆரம்பித்தன. நான் மெய்மறந்து கேட்டுக்கொண்டேன். வாழ்க்கையில் நோயுற்று நொந்துபோய் வந்த எனக்கு அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் ஞான முத்துக்கள் என்றே கூறலாம். இராமாயணம், பாரதம், பகவத்கீதை, கந்தபுராணம் போன்ற பலபலப்பட்ட விடயங்களை சுருக்கி மிக அழகாகப் பேசியதை என்வாழ்நாளில் மறக்கமுடியாது. இதற்கு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையை பாராட்டாமல் இருக்க முடியாது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவைச் செயலாளர் அவர்கள் சிவத்தமிழ்ச் செல்வர் சிவ. மகாலிங்கம் ஆற்றிய ஞானச்சுடர் மலர் வெளியீட்டு ஆய்வுரையின் பின் ஆற்றிய உரை என் மனதைத் தொட்டது. இந்த மலர் விற்பனைக்கு விடுவதில்லை. வியாபார நோக்கத்திற்காகவும் வெளிவருவதில்லை என்றும் இங்கேதான் பெறலாம். அல்லாவிடில் விலாசம் கொடுத்தால் வீடு தேடி வரும் என்று இப்படியான வார்த்தைகளை நான் கேட்டதும், நான் இவ்வுலகில்தான் இருக்கின்றேனோ என்று எண்ணினேன். இப்படியான தலைவர் செயலாளர் இருக்கும்போது இந்துமதம் என்றுமே மறையாது.

**A. அரசபிள்ளை**
**கல்வியங்காடு.**

## ஞானச்சுடர்:

சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆன்மீக சஞ்சிகையே "ஞானச்சுடர்" ஆகும். 1998 தை மாதத்தில் "ஞானச்சுடர்" முதற்பிரதி தோற்றம் பெற்றது. சேவைகள்- பணிகள் எனப்படும் படத்தொகுப்பின் முதற்பாகம் 2009இல் கறுப்பு- வெள்ளை படங்களுடன் வெளியாகியது. வர்ணப் படங்களுடன் வெளியாகும் பாகம் 11 வெளியிடப்படும் இந்நாளில் (05.02.2012) "ஞானச்சுடரின்" 169ஆவது மலர் வெளியாகிறது. பழைய அச்சுமுறையில் 250 பிரதிகளுடன் ஆரம்பமான "ஞானச்சுடர்" இன்று 2200 பிரதிகளுடன் கணனிப்பதிப்பாக வெளியாகிறது. விளம்பரம் எதுவுமற்ற இந்த ஆன்மீக சஞ்சிகையினை எந்த விற்பனை நிலையத்திலும் பெறமுடியாதென்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். வாசகர்களிடமிருந்து பெறப்படும் அபிப்பிராயங்கள்- விமர்சனங்கள்- வாழ்த்துக்கள் அனைத்துமே "ஞானச்சுடர்" வெளியீட்டினில் பங்குகொள்ளும் அனைவரையும் மேலும் மேலும் ஊக்கப்படுத்துவதாக அமைகிறது.

மாதத்தின் இறுதி வெள்ளியில் நடைபெறும் "ஞானச்சுடர்" வெளியீட்டு வேளையில் வெளியீட்டுரை- மதிப்பீட்டுரை நிகழ்த்த அழைக்கப்படும் பெருமக்கள் பலரதும் ஆன்மீகக் கருத்துக்கள் விழாவிற்கு வருகைதரும் பலரையும் இலகுவில் சென்றடைகிறது. "ஞானச்சுடர்" சிறப்புப் பிரதி பெறுவதற்காக ஒவ்வொரு மாதமும் பல தரப்பினரும் அழைக்கப்படுகிறார்கள். வெள்ளியன்று- ஒரு வேலைநாளாக இருக்கும்போதும் சிரமங்களைப் பாராது குடாநாட்டின் பல்வேறு ஊர்களிலிருந்தும் வருகைதரும் "சிறப்புப்பிரதி பெறுவோர்" அனைவரும் வெகுவாகப் பாராட்டப்படவேண்டியவர்களே. "சிறப்புப் பிரதி"கள் பெற வந்திருந்த பலரையுமே படங்களில் காண்கிறீர்கள்.

### நாகரிகத்தின் பெயரால் நாம் நற்பண்புகளை இழக்கலாகாது

நாகரிகம் என்ற பெயரால் நாம் நல்ல பண்புகளை இழந்துவிடக் கூடாது. இளஞ்சந்ததியினர் மத்தியில் சமய நம்பிக்கை, பெரியோரை மதித்தல், இன்சொல் பேசுதல், நல்ல சிந்தனைகள் உருவாதல், நற்செயல்கள் என்பவற்றை ஏற்படுத்தி எதிர்கால வாழ்வு சுபீட்சம் பெற அறநெறிக் கல்வி அவசியமானதாகும்.

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற வாராந்த நிகழ்வுகளில் உரையாற்றிய ஓய்வுபெற்ற அதிபர் சமூகஜோதி கா. கணேசதாசன் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில், "பாடசாலைகளில் சமயப் பாடத்தை பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் ஒரு பாடமாகவே கற்பிக்கின்றனர். ஆனால் அறநெறிப் பாடசாலைகளில் நற்பண்புகள் நல்ல பழக்கவழக்கங்கள் தெய்வ நம்பிக்கை, சமய உணர்வு, அன்பு, அறம், நேர்மை என்பன ஏற்படக்கூடியதான சமயக் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது. மாணவர்கள் மாதா, பிதா, குரு ஆகியோரை மதித்து வாழப் பழகவேண்டும் என்பதே அறநெறிக்கல்வியின் நோக்கம். பெற்றோர்கள் தம் பிள்ளைகளை ஞாயிறுதோறும் அறநெறிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து அனுப்பிவைக்க வேண்டும். போதனைகளிலும் பார்க்க செயல்கள்மூலமே நல்ல எண்ணங்களை மனதில் பதியச் செய்யலாம்" எனக்கூறினார்.

**27.08.2005** **உதயன்**

1998ஆம் ஆண்டு தைமாத முதலாவது மலருக்கு நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் வழங்கிய அருளாசிச் செய்தியை இத்துடன் பிரசுரித்துள்ளோம்.

**சைவப் பெருமக்களே!**

சந்நிதியான் ஆச்சிரமம் செய்து வருகின்ற தர்மப்பணிகள் பல. அவற்றை நெறிப்படுத்துமுகமாக சைவ கலை பண்பாட்டுப் பேரவையை அமைத்து வாராந்த சொற்பொழிவுகளை ஏற்படுத்தி வருடாந்தம் நடைபெறுகின்ற விசாகப் பெருவிழா, கந்தசஷ்டிப் பெருவிழா, திருவாசகப் பெருவிழா போன்றவற்றை நடாத்தியும், சான்றோர்களுக்குப் பட்டயங்களை வழங்கியும் தமிழுக்கும் சமயத்துக்கும் தொண்டாற்றி வரும் பேரவையின் அறிவுச் சிந்தனைகளை எழுத்து வடிவிலே தருவதற்கு மாதந்தோறும் "ஞானச்சுடர்" என்ற நூலை வெளியிட முன்வந்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இன்றைய சூழ்நிலையில் சமயக் கருத்துக்களை வளர்ந்துவரும் சமுதாயத்திற்கு கொடுக்கவேண்டியது எங்களது மேலான பங்காகும். அவ்வகையில் சிந்தனையைத் தூண்டுமுகமாக மாதந்தோறும் வெளிவரும் மலர் அமையவேண்டியது எல்லோரது விருப்பமாகும். சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை எடுத்திருக்கும் முயற்சிகளுக்கு எல்லோருடைய ஆதரவும் ஆசிகளும் கிடைக்கவும், பணிகள் மேலும் சிறக்கவும் இறைவனை வேண்டி ஆசிகள் கூறி பிரார்த்திக்கின்றோம்.

"என்றும்வேண்டும் இன்ப அன்பு"

**1998ஆம் ஆண்டு தைமலர்** **குருமகா சந்நிதானம்**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்**

# எழுத்தாளர்களின் நூல்களை வாங்கி ஊக்கப்படுத்துங்கள்

## பிரதேச நூலகங்களுக்குக் கோரிக்கை

எழுத்தாளர்களால் வெளியிடப்படும் நூல்களை பிரதேச சபை நூலகங்கள் வாங்கி தமது நூலகங்களில் பாவனைக்கு வைப்பதன்மூலம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும். தொண்டைமானாறு செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற "அருள் வழங்கும் மாரியம்மன்", "இதுதான் இந்துமதம்" ஆகிய நூல்கள் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய வலிகாமம் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் செ. செல்வரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

ப. சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) எழுதிய இவ்விரு நூல்களும் சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆதரவுடன் வெளியிடப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சித்தாந்த ரத்தினம் கலாநிதி மா. வேதநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வாழ்த்துரை வழங்கிய செ. செல்வரத்தினம் மேலும் கூறியதாவது,

"கலை இலக்கியத்துறை வளர்ச்சிக்கென எழுத்தாளர்களாலும் கலைஞர்களாலும் பல அரிய நூல்கள் எழுதப்பட்டு வெளியிடப்படுகின்றன. பல கஷ்டங்களின் மத்தியில் அவர்கள் நூல்களை வெளியிடுகின்றனர். அவர்களின் வெளியீடுகளை வாங்கி அவர்களை ஊக்கப்படுத்தவேண்டும். நூல்களை வாங்குவதில் பிரதேச சபை நூலகங்கள் முன்வரவேண்டும்" எனக் கூறினார்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் கலாநிதி மா. வேதநாதன் தனது தலைமையுரையில், "கோப்பாய் சிவத்தினால் எழுதி வெளியிடப்படும் இவ்விரு நூல்களும் ஆய்வுநோக்கில் எழுதப்பட்டவையாகவும், பல விடயங்களைத் தொகுத்து ஒரு களஞ்சியமாக தருபவையாகவும் அமைந்துள்ளன. இந்து சமயத் தத்துவம், கலை, சைவ சித்தாந்தத்தின் பெருமை எல்லாவற்றையும் விளக்கும் இந்நூல்கள் இவ்விடத்தில் வைத்து வெளியிடப்படுவது சிறப்புடையது" என்றார்.

சிவத்திரு வ. குமாரசாமி அறிமுக உரையையும், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் வெளியீட்டுரையையும் நிகழ்த்தினார். சிவஸ்ரீ க. சுதர்ஷனக்குருக்கள், சிவஸ்ரீ கு. தியாகராசா குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்.

புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி ஆசிரியர் ச. லலீசன் நூலின் ஆய்வுரையை நிகழ்த்தினார். முதற்பிரதியை பிரான்பற்று முத்துமாரியம்மன் ஆலய தர்மகர்த்தா ந. செல்வராசா பெற்றுக்கொண்டார்.

**27.06.2004** **உதயன்**



ஆச்சிரமத்தில் இடம் பெற்ற பாடசாலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்வு



ஆச்சிரமத்தில் இடம் பெற்ற பாடசாலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்வு



வெள்ளி நிகழ்வில் மா.ந.பரமேஸ்வரனது இன்னிசை நிகழ்வு.




சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் சொற்பொழிவாற்றும் காட்சி.



கவிமணி க.ஆனந்தராசா அவர்களின் வெள்ளி நிகழ்வின் போது
அவரோடு ஆவரங்கால் சிவன் கோவில் பிரதம குரு ப. நடராசக் குருக்கள்.




ஆசிரியர் இரா. செல்வவடிவேல் சொற்பொழிவாற்றும் காட்சி.



பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையைச் சார்ந்த மாணவிகளின் கலை நிகழ்வு.



இசைமணி வ.செல்லத்துரை அவர்கள் இன்னிசை வழங்கும் நிகழ்வு.



வெள்ளி நிகழ்வில் பண்ணிசைப் புலவர் சி.தில்லைமணி அவர்கள் பண்ணிசை நிகழ்த்துவதையும்
அணிசெய்கலைஞர்களாக வித்துவான் அ.ஜெயராமன் வயலின் இசைப்பதையும் வித்துவான்
சதா வேல் மாறன் மிருதங்க இசை வழங்கும் நிகழ்வினையும் காணலாம்.



வாராந்த நிகழ்வில் ஆச்சிரம மண்டபத்தில் கவியரங்கம் நிகழும் வைபவம்



வாராந்த வெள்ளி நிகழ்வில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் இசை நிகழ்வு




தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மாணவிகளின் காவடி ஆட்ட நிகழ்வு




மாதாந்த மலரான ஞானச்சுடர் வெளியீட்டின் போது
ஆசிரியர் துரை கணேசமூர்த்தி அவர்களும் ஆசிரியர் க.நித்திய
தசீதரன் அவர்களும் கலந்து கொள்ளும் நிகழ்வு.



மாதாந்த மலரான ஞானச்சுடர் வெளியீட்டின் போது
ஆசிரியர் துரை கணேசமூர்த்தி அவர்களும் ஆசிரியர் க.நித்திய
தசீதரன் அவர்களும் கலந்து கொள்ளும் நிகழ்வு.



ஞானச்சுடர் வெளியீட்டு நிகழ்வில் மதிப்புரை வெளியீட்டுரை நிகழ்த்தும் திரு. தெணியான் அவர்களும் சிவ ஆறுமுகசாமி அவர்களும் பங்கு பற்றிய காட்சி.



ஞானச்சுடர் வெளியீட்டு நிகழ்வில் மதிப்புரை வெளியீட்டுரை நிகழ்த்தும் திரு. தெணியான் அவர்களும் சிவ ஆறுமுகசாமி அவர்களும் பங்கு பற்றிய காட்சி.



ஞானச்சுடர் வெளியீட்டின் போது வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை நிகழ்த்திய விரிவுரையாளர் அ.குமாரவேல் அவர்களும் இளை ஆசிரியர் க. நவரெத்தினம் அவர்களும் காணப்படுகின்றனர்.



ஞானச்சுடர் வெளியீட்டின் போது வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை நிகழ்த்திய விரிவுரையாளர் அ.குமாரவேல் அவர்களும் இளை ஆசிரியர் க. நவரெத்தினம் அவர்களும் காணப்படுகின்றனர்.



சுடர் வெளியீட்டில் வெளியீட்டுரை மதிப்புரை ஆற்றும் பிரம்மஸ்ரீ
கு. தியாகராஜசர்மா அவர்கள்



சுடர் வெளியீட்டில் வெளியீட்டுரை மதிப்புரை ஆற்றும்
திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்



ஞானச்சுடர் மலர் வெளியீட்டின் போது அதிபர் ஆறுதிருமுருகன்
சிறப்புப் பிரதி வழங்கும் நிகழ்வில் மக்கள்வங்கி பிராந்திய முகாமையாளர்
சி. பத்மநாதன் அவர்களுக்கு வழங்கும் நிகழ்வு.



மலர் வெளியீட்டு நிகழ்வில் மதிப்புரை ஆற்ற வருகை புரிந்த அதிபர்
ஆ.சிவநாதன் காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தான நிர்வாகி
க.சோமசேகரம் அவர்களுக்கு மலரினை வழங்கும் நிகழ்வு.




மலர் வெளியீட்டினை சிறப்பிக்க வருகைபுரிந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்த மூர்த்தியும் கிராம சேவையாளர் சோ. பரமநாதன் அவர்களும் சிறப்புப் பிரதியைக் கையளிக்கும் காட்சி



மலர் வெளியீட்டினை சிறப்பிக்க வருகைபுரிந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்த மூர்த்தியும் கிராம சேவையாளர் சோ. பரமநாதன் அவர்களும் சிறப்புப் பிரதியைக் கையளிக்கும் காட்சி




சுடரின் வெளியீட்டின் பொழுது பேரவையின் அழைப்பின் பேரில் வருகைபுரிந்த வாசகர்கள் சிறப்புப் பிரதியுடன் காணப்படுகின்றனர்.




சுடரின் வெளியீட்டின் பொழுது பேரவையின் அழைப்பின் பேரில் வருகைபுரிந்த வாசகர்கள் சிறப்புப் பிரதியுடன் காணப்படுகின்றனர்.



சுடரின் வெளியீட்டின் பொழுது பேரவையின் அழைப்பின் பேரில் வருகைபுரிந்த வாசகர்கள் சிறப்புப் பிரதியுடன் காணப்படுகின்றனர்.



சுடரின் வெளியீட்டின் பொழுது பேரவையின் அழைப்பின் பேரில் வருகைபுரிந்த வாசகர்கள் சிறப்புப் பிரதியுடன் காணப்படுகின்றனர்.



சுடரின் வெளியீட்டின் பொழுது பேரவையின் அழைப்பின் பேரில் வருகைபுரிந்த வாசகர்கள் சிறப்புப் பிரதியுடன் காணப்படுகின்றனர்.




சுடரின் வெளியீட்டின் பொழுது பேரவையின் அழைப்பின் பேரில் வருகைபுரிந்த வாசகர்கள் சிறப்புப் பிரதியுடன் காணப்படுகின்றனர்.




சுடரின் வெளியீட்டின் பொழுது பேரவையின் அழைப்பின் பேரில் வருகைபுரிந்த வாசகர்கள் சிறப்புப் பிரதியுடன் காணப்படுகின்றனர்.



சுடரின் வெளியீட்டின் பொழுது பேரவையின் அழைப்பின் பேரில் வருகைபுரிந்த வாசகர்கள் சிறப்புப் பிரதியுடன் காணப்படுகின்றனர்.

## கௌரவிப்பு:

ஞானச்சுடரின் வெற்றிக்கு மூலகாரணமே ஆக்கங்களை வழங்கும் அன்பான கட்டுரையாளர்களே. அவர்களது காத்திரமான- பெறுமதிமிக்க- உயிரோட்டமுள்ள கட்டுரைகள் ஞானச்சுடரின் வரவேற்புக்குப் பெரும் காரணமாக அமைகிறது. இத்தகைய பெருமைக்குரிய கட்டுரையாளர்களை இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கௌரவிப்பது சந்நிதியான் ஆச்சிரமத்தின் தனித்துவமான பணியாகவுள்ளது. இத்தகைய கௌரவம் பெற்ற கட்டுரையாளர்கள் சிலரையும, வாராந்த நிகழ்வுகளில் பங்குகொண்ட முக்கியஸ்தர்கள் பலரையும் இங்கே படங்களில் காண்கிறீர்கள்.

ஆக்கங்களை எழுதியோரைக் கௌரவிக்கும் நிகழ்வில் 2000ஆம் ஆண்டு தை மாதம் கௌரவிக்கப்பட்ட "புத்தொளி ந. சிவபாதம்" அவ்விடயம் தொடர்பாக மாசிமாத ஞானச்சுடரில் எழுதிய எண்ணக்கருத்தினை இங்கே மீண்டும் நினைவு கூருகின்றோம்.

### நம்பலாம் நடந்தது!

ஈழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் வரை- படைப்பிலக்கிய முலவர்களான க.தி. சம்பந்தன், சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோனிலிருந்து கடந்த ஐம்பது ஆண்டுகளிலிருந்து இன்றுவரை எண்ணற்ற எழுத்தாளர்கள், அறிஞர்கள் எழுதி வருகிறார்கள். தாம் எழுதிவருவபற்றை பத்திரிகை, சஞ்சிகை களுக்கு அனுப்பி அவை பிரசுரிக்கப்படுகின்றன.

பேனாவையும், கடதாசியையும் பணம் கொடுத்து வாங்கும் எழுத்தாளன் பல நூல்களையும் பணம் கொடுத்து வாங்கிப் படித்து இரவுபகல் சிந்தித்துத்தான் எழுதுகின்றான். எழுதுவது ஒரு சாதாரண விடயமல்ல. அது மிகக் கஷ்டமான ஒன்றாகும். எழுத்தாளன் தானும் எழுதி மகிழ்ந்து படிப்பவர்களையும் மகிழ்விக்கிறான்.

ஈழத்தைப் பொறுத்தளவில் எழுத்தாளன் எழுதுகின்றான். பிரசுரகர்த்தாக்கள் பிரசுரிக்கிறார்கள். வாசகன் படித்து மகிழ்கிறான். அவ்வளவோடு படிக்கும் மக்கள் எழுத்தாளனை மறந்து விடுகிறார்கள். எழுத்தாளனுடைய ஆக்கங்களுக்கு ஈழத்துப் பத்திரிகைகளோ, சஞ்சிகைகளோ பணம் கொடுக்க முன் வருவதில்லை. பெரும் வருவாயை ஈட்டும் தேசியப் பத்திரிகைகளும் எழுத்தாளனுக்குப் பணம் கொடுப்பதில்லை.

கடந்த ஐம்பதாண்டுகால ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு எழுத்தாளன் எழுதிய ஆக்கங்களைத் தொடர்ந்து பிரசுரித்து அந்த எழுத்தாளனை ஏதோ ஒரு வகையில் கௌரவிக்கும் எண்ணம் எவருக்கும் ஏற்பட்டதாக வரலாறு இல்லை.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை எழுத்தாளரை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் ஒரு பெறுமதி வாய்ந்த முன்மாதிரியை 30.01.2000இல் செய்து முடித்துள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை கடந்த இரு ஆண்டுகளாக ஞானச்சுடர் என்ற சமய சஞ்சிகையை வெளியிட்டு

வருகின்றது. ஞானச்சுடரில் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து கல்வியாளர்கள், சமயப்பெரியார்கள் கட்டுரை, கவிதைகளை எழுதி வருகிறார்கள். அவர்கள் பிரதிபலனை எதிர்பாராது "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற சித்தாந்தப்படி எழுதி வருகின்றார்கள்.

இவர்களை இப்பேரவை கௌரவிக்க முன்வந்ததைத்தான் "ஆச்சரியம்" என்கிறேன். சந்நிதியான் ஆச்சிரமத்தை அதிசிரத்தையுடன் கவனித்து அங்கு செல்லும் அடியாருக்கு அன்னதானம் வழங்குவதில் முன்னின்று உழைக்கும் திரு செ. மோகனதாஸ் சுவாமிகள் ஞானச்சுடருக்கு ஆக்கங்கள் எழுதி வருவோரை பதினைந்து இருபது மைலில் இருப்பவர்களையும் நேரில் சென்று சந்தித்து பேரவை தங்களைப் பாராட்ட முடிபு செய்துள்ளதென்ற இனிப்பான செய்தியைச் சொன்னதுடன் அன்றையதினம் தவறாது வந்து தங்களுக்குரிய பாராட்டையும், விருதையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அன்புக் கட்டளையிட்டார்.

சைவ கலை பண்பாட்டுக் கழகம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் 30.01.2000ம் ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ *சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்* வாழ்த்துரை வழங்க, ஞானச்சுடர் சஞ்சிகைக்கு தொடர்ந்து ஆக்கங்களை எழுதிய பதின்மூன்று எழுத்தாளர்களுக்கு என்றும் நினைவில் வைத்திருக்கவும், தினமும் எண்ணி மகிழக்கூடியதாகவும் மிகப்பெரும் விருதினை அளித்துக் கௌரவித்ததுடன் சிறு கட்டுரைகளை எழுதியோருக்கும் பரிசளித்து கௌரவித்தது. எழுத்தாளருக்கு இந்நிகழ்வு தூண்டும் சுடராக இருப்பதுடன் ஏனைய ஸ்தாபனங்களுக்கும் முன்மாதிரியாக அமைந்தது. சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை காலத்தினால் செய்த உதவி ஞாலத்தின் மாணப் 'பெரிதல்லவா!

-புத்தொளி-

## *வாசகர்போட்டி:*

வருடம் முழுவதும் வெளியாகும் "ஞானச்சுடர்" சஞ்சிகையிலிருந்து தெரிவு செய்யப்படும் கேள்விகளுக்கு, வயது வித்தியாசமின்றி வாசகர்கள் பங்குகொள்ளும் "வாசகர் போட்டியினில்" பலநூறு வாசகர்கள் பங்குகொள்கின்றனர். இந்த வாசகர் போட்டிக்கு விடைதருவோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துச் செல்வது இந்தப் போட்டியினில் வாசகர்கள் காட்டும் அதீத அக்கறையினைக் காட்டி நிற்கிறது. ஒவ்வொரு வருடத்திலும் மார்கழி மாத ஞானச்சுடரில் போட்டிக்கான கேள்விகள் வெளியாகும். மாசிமாதத்தில் வெற்றியாளர்கள் அழைக்கப்பட்டு, ஞானச்சுடர் வெளியீட்டு விழாவன்று பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும். கடந்த வருட பரிசளிப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்களையே இங்கே பார்க்கிறீர்கள். இத்தகைய நிகழ்வு ஒன்றினில் ஆச்சிரமத்து சுவாமிகள் உரையாற்றுவதனையும், ஆச்சிரமத்தின் செயற்பாடுகளுக்கு முழுமையான பங்களிப்பை வழங்கிவரும் பிரமுகர் சுவாமிகளுடன் உரையாடுவதையும் இங்கே காணலாம்.



ஞானச்சுடர் மலருக்கு ஆக்காங்களை வழங்கியோரைக்
கௌரவிக்கும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட வர்களோடு
நல்லை ஆதீன முதல்வரும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும்.



நல்லை ஆதீன முதல்வருடன் பேரவையால் கௌரவிக்கப்பட்ட
கட்டுரையாளர்கள் மனப் பூரிப்புடன் நிற்கும் காட்சி.



ஆக்கங்களை வழங்கிய புராண வித்தகர் சிவ சண்முகவடிவேல் அவர்கட்கு நல்லை ஆதீன முதல்வர் பொன்னாடை போர்த்தி கேடயம் வழங்கும் நிகழ்வு.



ஆக்கங்களை எழுதிய கட்டுரையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் ஆச்சிரம சுவாமிகள பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்களுக்குரிய கேடயத்தினை வழங்கும் நிகழ்வு



வாராந்த வெள்ளி நிகழ்வில் பங்கு பற்றியோருக்கான கௌரவிப்பு நிகழ்வில் Dr. V. பாலகிருஸ்ணன் அவர்களுக்கு நிகழ்வில் கலந்து கொண்ட திரு. இ.சரவணபவன் நினைவுச் சின்னத்தை வழங்கும் நிகழ்வு.



சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் அவர்களுக்கு இளைப்பாறிய அதிபர் திரு. ச.நவரெத்தினராசவேல் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னத்தை வழங்கும் காட்சி.



சிறுப்பிட்டி கிராம சேவையாளராகக் கடமை புரியும் க.ஸ்ரீஸ்கந்தராசாவுக்கு பண்ணிசைப் புலவர் சி. தில்லைமணி நினைவுச்சின்னம் வழங்கும் நிகழ்வு.



விரிவுரையாளர் ச.லலீசன் அவர்கட்கு திரு. ஆறுதிருமுருகன் நினைவுச் சின்னம் வழங்கும் காட்சி.




வெள்ளி நிகழ்வில் பங்கு பற்றிய ஆசிரியர் க.கைலைநாதன் அவர்களுக்கு நிகழ்விற் வருகை புரிந்த திரு. சிவப்பிரகாசம் அவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு



இளைப்பாறிய அதிபர் திருமதி. தவமலர் சுரேந்திரநாதன் அவர்கட்கு நிகழ்வில் பங்கு பற்றியமைக்கான விருதினை ஆசிரியை திருமதி. கௌரி சுரேசன் வாழங்கும் காட்சி



அதிபர் செ.பரமேஸ்வரன் அவர்கட்கு பேரவை உறுப்பினர்
திரு. ஐ.அரசபிள்ளை அவர்கள் வாராந்த நிகழ்வில் பங்கு பற்றியதற்கான
நினைவுச் சின்னம் வழங்குதல்.



நிகழ்விற்கு வருகை புரிந்த இலங்கை வங்கியில் கடமை புரியும்
திரு.த.கணேசமூர்த்தி அவர்கள் வாராந்த நிகழ்வில் பங்கு பற்றிய
ஆசிரியர் காரை M.P. அருளானந்தம் அவர்கட்கு நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு.




வருடா வருடம் நடைபெற்று வரும் ஞானச்சுடர் வாசகருக்குரிய வினா விடைப் போட்டியில் தகுதி வாய்ந்தவருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் வாசகர் ஒருவருக்குரிய பரிசினை ச.தேவதாசன் J.P. வழங்கிக் கௌரவிக்கின்ற நிகழ்வு.




வாசகர் போட்டியில் சரியான விடைகளை எழுதியமைக்கான பரிசினை செல்வி. அ.கந்தையா அவர்கட்கு நீர்வை மணி கு. தியாகராஜசர்மா அவர்கள் வழங்கும் நிகழ்வு.



செல்வி சசிக்குமார் நிலானிக்குரிய பரிசினை
திரு. இரா. கேதீசன் அவர்கள் வழங்கும் நிகழ்வு.




முது நிலைவிரிவுரையாளர் நாச்சியார் செல்வ
நாயகம் அவர்கள் திருமதி. அருணகிரி நாதன் அவர்களுக்கு வாசகர்
போட்டியில் தெரிவு செய்யப்பட்டமைக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு.




நடைபெற்ற வாசகர்களுக்கு பரிசில் வழங்கும்
நிகழ்வுகளில் கலந்து கொண்டோர்.




நடைபெற்ற வாசகர்களுக்கு பரிசில் வழங்கும்
நிகழ்வுகளில் கலந்து கொண்டோர்.



பேரவை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் சுவாமி அவர்கள் உரைஆற்றும் நிகழ்வு.




சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற் பாட்டிற்கு தன்னாலான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் திரு. கு.கங்கைவேணியன் சுவாமி அவர்களோடு கலந்துரையாடும் காட்சி.

## சமுதாயப்பணி:

நித்திய அன்னப்பணி ஆச்சிரமத்தின் முதற்பணி. "முருகன் காலடியே சரணம்" என சந்நிதியிலும், சந்நிதிச் சுற்றாடலிலும் நிரந்தரமாகத் தங்கியுள்ள 73 முதிர்ந்தவர்கள் இந்த நித்திய அன்னப்பணியினால் பசியாறிச் செல்கின்றனர். அவர்களுக்கு மூன்றுவேளை உணவு, இரண்டு நேர தேநீர், வருடத்தில் இருமுறை உடுபுடவைகள்- வேட்டிகள், மாரிகாலம் ஆரம்பமாக முன்னர் போர்வைகள் என ஆச்சிரமத்தின் பணி தவறாது தொடர்கிறது. இந்த நித்திய வருகையாளர்களைவிடப் பலநூறுபேர் தினமும் பசியாறிப் போகின்றனர்.

கற்கும் மாணவர்களுக்காக புத்தகப்பைகள், கழுத்துப்பட்டி, கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள், விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசுப்பொருட்கள் எனப் பலவிதமாகவும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதைவிட மூக்குக் கண்ணாடி வழங்கல், தள்ளுவண்டி வழங்கல், 3 சில்லு சைக்கிள் வண்டி வழங்கல் என்பனவும் அடிக்கடி வழங்கப்படுகிறது. ஞானச்சுடர் வெளியீட்டுநாள், திருவாசக விழா, வைகாசிப் பெருவிழா, அருணகிரிநாதர் விழா, மயில்வாகனம் சுவாமிகளின் விழா போன்று ஆச்சிரமத்தில் நடைபெறும் அனைத்து விழாக்களிலும் "துவிச்சக்கரவண்டி" வழங்கப்படுவது சாதாரண நிகழ்வாகிவிட்டது.

25க்கும் மேற்பட்ட பல்கலைக் கழக மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள், (சில மாணவர்களுக்கு மட்டுமான) தனியார் கல்வி நிலைய கட்டணங்கள் என உதவிப்பட்டியல் நீளுகிறது. தவிர நலிவுற்றோருக்கு உதவும் சமுதாயப் பணியானது பல்வேறு உட்கட்டமைப்புக்கள் கொண்டு அமைகிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழான 126 குடும்பங்களுக்கு பணமும் உதவிப் பொருளுமாக இந்த உதவி வழங்கப்படுகிறது. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, கல்வி கற்கும் பிள்ளைகளின் தொகை, மாதாந்த வருமானம் என்பன கவனத்தில் எடுக்கப்பட்டு இத்தொகை வித்தியாசப்படுகிறது.

அனைத்துக் குடும்பங்களுக்கும் மாதாந்த உதவித்தொகை கொடுக்கப்படுவதுடன், அதில் அரைவாசிப் பேருக்கு அரிசியும் வழங்கப்படுகிறது. இந்த உதவிகள் பெறும் அனைத்துக் குடும்பங்களும் ஒவ்வொரு மாதத்தின் கடைசி வெள்ளியன்று மாலையில் (பகலில் "ஞானச்சுடர்" வெளியீடு) ஆச்சிரம வளாகத்தில் ஒன்றுகூடி உதவிகளைப் பெற்றுச் செல்கின்றனர்.

இத்தகைய சமுதாயப் பணிகளின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களையே இங்கு பார்க்கிறீர்கள்.

## இலவச மருத்துசேவை:

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் ஆற்றப்படுகின்ற நித்திய அன்னப்பணிக்கு இணையாக இலவச மருத்துவ சேவையும் முதன்மை பெறுகிறது. 14.10.2001இல் ஆரம்பமான இந்த இலவச மருத்துவ சேவையானது பத்து ஆண்டுகளை நிறைவு செய்து பதினோராவது

ஆண்டில் காலடி பதிக்கிறது. இதனிடையே, சந்நிதியான் ஆச்சிரமத்தினால் கட்டி முடிக்கப்பட்டு, "அமரர் மகேஸ்வரன் ஞாபகார்த்த மண்டபம்" எனப் பெயர் சூட்டப்பட்ட புதிய கட்டிடம் 01.01.2010இல் அமரர் மகேஸ்வரனின் மகள் பவதாரணியினால் திறந்துவைக்கப்பட்டது. அன்று முதல் ஆச்சிரம வைத்திய சேவைப்பிரிவு இப்புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இலவச மருத்துவ சேவையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா 16.10.2011இல் இடம்பெற்றது. வைத்திய நிலையத்தில் கடந்த பத்து ஆண்டுகளிலும் சேவையாற்றிய வைத்தியர்களையும், தற்போது சேவையாற்றிவரும் வைத்தியர்களையும் கௌரவிக்கும் முகமாகவே இந்த விழா முன்னெடுக்கப்பட்டது. வாரத்தில் இரண்டு (புதன், ஞாயிறு) நாட்கள் நடைபெறும் இந்த இலவச மருத்துவ சேவையினால் கடந்த ஆண்டு (2011) மட்டும் 7280 பேர் பயனடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

புதிய வைத்திய சேவைக் கட்டிடத் திறப்பு விழாவின்போதும், வைத்தியர்களின் கௌரவிப்பு நடைபெற்ற போதும் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் சிலவற்றையே இங்கு காண்கிறீர்கள்.

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் இலவச வைத்திய சேவைகளை விஸ்தரிக்குமாறு கோரிக்கை

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இலவச வைத்திய சேவையை அச்சுவேலி, இடைக்காடு மற்றும் வன்னிப் பிரதேசத்தில் கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதிகளில் ஆரம்பிக்குமாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இடைக்காடு, வளலாய், தம்பாலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசத்தில் வைத்தியசாலைகள் இன்மையால் மக்கள் சிரமங்களையும் கஷ்டங் களையும் எதிர்நோக்கின்றனர்.

இதேபோல யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி பிரதேச கிராம மக்கள் வைத்திய வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமப்படுகின்றனர் என்று சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமம் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக சந்நிதி கோவிற் சூழலில் வைத்தியசேவைக்கென சொந்தக் கட்டடம் அமைத்து வாரத்தில் ஞாயிறு புதன் அகிய இரு தினங்களிலும் இலவச வைத்தியசேவையினை நடத்தி மருந்து வகைகளையும் இலவசமாக வழங்கி வருகின்றது.

**23.10.2011** **உதயன்**



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தையும் சந்நிதியான் ஆச்சிரமத்தையும்
தஞ்சம் அடைந்துள்ள முதியோருக்கான உடுபுடவை வழங்கும் நிகழ்வில்
பங்கு பற்றிய முதியோர்கள் சிலர்.



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தையும் சந்நிதியான் ஆச்சிரமத்தையும்
தஞ்சம் அடைந்துள்ள முதியோருக்கான உடுபுடவை வழங்கும் நிகழ்வில்
பங்கு பற்றிய முதியோர்கள் சிலர்.



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தையும் சந்நிதியான் ஆச்சிரமத்தையும் தஞ்சம் அடைந்துள்ள முதியோருக்கான உடுபுடவை வழங்கும் நிகழ்வில் பங்கு பற்றிய முதியோர்கள் சிலர்.



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தையும் சந்நிதியான் ஆச்சிரமத்தையும் தஞ்சம் அடைந்துள்ள முதியோருக்கான உடுபுடவை வழங்கும் நிகழ்வில் பங்கு பற்றிய முதியோர்கள் சிலர்.



04-01-2008 தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களுக்குரிய ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட கழுத்துப் பட்டியினை பாடசாலை அதிபர் வ.கணேசமூர்த்தியிடம் இளைப்பாறிய ஆசிரியர் ஐ.சண்முகலிங்கம் அவர்கள் வழங்கும் காட்சி



அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய மாணவர்களுக்குரிய கழுத்துப் பட்டியினை ஆச்சிரமத்தின் சார்பில் பாடசாலை அதிபரிடம் கையளிக்கும் நிகழ்வில் குப்பிளான் சண்முகம் என அழைக்கப்படும் ஐ.சண்முகலிங்கம் அவர்கள்.



சங்கானைக் கோட்டமுன்பள்ளிக்குரிய ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்களை பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் முன் பள்ளிக்குரிய ஆசிரியைகளிடம் வழங்கும் நிகழ்வு.



சங்கானைக் கோட்டமுன்பள்ளிக்குரிய ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட கற்றல் உப கரணங்களை பேராசிரியர் அ.சண்முகதாஸ் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் முன் பள்ளிக்குரிய ஆசிரியைகளிடம் வழங்கும் நிகழ்வு.




ஞானச்சுடர் மலருக்குரிய ஆக்கங்களை வழங்கியோரைக்
கௌரவிக்கும் நிகழ்வின் போது மருதங்கேணி பிரதேச செயலரின்
பிரிவில் உள்ள உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் 07 மாணவர்களுக்குரிய
பெறுமதி மிக்க ஆங்கில அகராதியினை ஆச்சிரமத்தின் சார்பில்
இலங்கை வங்கியில் கடமைபுரியும் திரு. த. கணேசமூர்த்தி அவர்கள் கையளிக்கும் நிகழ்வு



01-04-2011 நடைபெற்ற வாராந்த நிகழ்வின் போது புன்னாலைக்
கட்டுவன் மகாவித்தியாலயத்தைச் சார்ந்த 32 மாணவர்களுக்கா
ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட புத்தகப் பையினை பாடசாலை ஆசிரியரிடம்
திரு. ஷாந்தன் சத்தியமூர்த்தி அவர்கள் வழங்கும் நிகழ்வு.



கொற்றாவத்தை பூமகள் மழலைகள் பூங்கா மாணவர்களிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்குரிய ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களை சின்மயாமிஷனைச் சார்ந்த கிரஷ்ணாத் மானந்தா அவர்கள் வழங்கும் நிகழ்வு.




பூதவராயர் ஒழுங்கை பருத்தித்துறையைச் சேர்ந்த நடேசமுதலி மிதுனா என்னும் மாணவிக்குரிய ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை சின்மயாமிஷன் ஜாக்ரத சைதன்யா சுவாமி அவர்கள் மாணவியின் தந்தையிடம் கையளிக்கும் காட்சி.




வல்லிபுரம் புலோலியைச் சேர்ந்த ஞா.இராஜேஸ்வரி என்பவருக்கு சுயதொழில் முயற்சிக்காக ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை ஆசிரியர் இரா. செல்வ வடிவேல்வழங்கும் நிகழ்வு.




வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வி சிவானந்தம் அனுஷா எனும் மாணவிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை Dr. அ செந்தில் குமரன் அவர்கள் வழங்குவதையும் அன்றைய நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் காணலாம்.



தொண்டைமானாற்றைச் சேர்ந்த செல்வி தங்கவடிவேல் தர்ஷினி என்பவருக்கு ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வணடியினை ஆசிரியர் காரை M.P.அருளானந்தமும் திரு. சி.பத்மநாதன் J.P. அவர்களும் வழங்கும் காட்சி




ஞானச்சுடர் வெளியீட்டின் போது சங்கு வேலியைச் சேர்ந்த செல்வன் சிவகுமாரன் சஜீத்தன் என்பவரது துவிச்சக்கர வண்டியினை அவரது தந்தையாரிடம் அதிபர் செ.பரமேஸ்வரன் வழங்குவதையும் அன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர் மா.ஞானலிங்கம் அவர்களையும் காணலாம்.



ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பன்முகப் பணிகளின் வகையில் கொற்றாவத்தை பூமகள் சன சமூக நிலைய மழலைகள் பூங்கா மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிக்குரிய பரிசுப் பொருட்களை இளைப்பாறிய பிரதி அதிபர் தெணியான் அவர்களும், அன்றைய நிகழ்விற்கு வருகை புரிந்த முருகனடியார் ஒருவரும் வழங்குவதைக் காணலாம்.




ஆச்சிரமத்தினால் மேற் கொள்ளப்பட்டு வரும் பன்முகப் பணிகளின் வகையில் கொற்றாவத்தை பூமகள் சன சமூக நிலைய மழலைகள் பூங்கா மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிக்குரிய பரிசுப் பொருட்களை இளைப்பாறிய பிரதி அதிபர் தெணியான் அவர்களும், அன்றைய நிகழ்விற்கு வருகை புரிந்த முருகனடியார் ஒருவரும் வழங்குவதைக் காணலாம்.



பொலிகண்டியைச் சேர்ந்த எரிசபேத் செபஸ்தியாம்பிள்ளை என்பவருக்கு ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட மூக்குக் கண்ணாடியை திரு. சி. மகாலிங்கம் அவர்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு.



ஞானச்சுடர் வெளியீட்டின் போது ஆச்சிரமப் பணிகளில் ஒன்றான மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வில் வளளாயைச் சேர்ந்த சி. பரமானந்தம் என்பவருக்கு அஞ்சல் அதிபர் ஐ. லோகஞானம் அவர்கள் வழங்கும் நிகழ்வு.



வாராந்த வெள்ளி நிகழ்வின் போது பார்வைக்குறைபாடுடைய பயனாளி ஒருவருக்கு மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் சி. பத்மநாதன் அவர்கள் மூக்குக் கண்ணாடி அணியும் காட்சியை காணலாம்.



வருடாந்த வைகாசிப் பெருவிழாவின் போது ஆச்சிரமத்தின் சமூக சேவை திட்டத்தின் கீழ் ஆவரங்காலைச் சேர்ந்த செல்வி தே. துர்க்கா என்பவருக்கு விழாவிற்கு வருகை புரிந்த அன்பர்களால் கையளிக்கப்படும் நிகழ்வு.




திக்கத்தைச் சேர்ந்த மாணவி இராகவன் நிவேதிகா என்பவருக்கு துவாரகா வெதுப்பக உரிமையாளர் த. சிவகுருநாதன் அவர்கள் துவிச்சக்கர வண்டியினை வழங்கும் காட்சி.



தைமாத ஞானச்சுடர் வெளியீட்டின் பொழுது புத்தூரைச் சேர்ந்த செல்வி சிவசுப்பிரமணியம் சரணிகா என்பவருக்குரிய துவிச்சக்கர வண்டியினை அதிபர் ஆறு திருமுருகன் வழங்குவதையும் அருகில் அதிபர் ஆ. சிவநாதன் அவர்களையும் காணலாம்.



மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையூடாக நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வுக்கான பரிசுப் பொருட்களை இளை ஆசிரியர் ஐ. சண்முகலிங்கம் அவர்கள் வழங்கும் நிகழ்வு.



ஞானச்சுடர் வெளியீட்டின் போது தொண்டைமானாற்றைச் சேர்ந்த செல்வன் மனோகரன் பிரசாத் என்னும் மாணவனுக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சிறிஸ்கந்த மூர்த்தி அவர்கள் வழங்கும் நிகழ்வில் அதிபர் வ. கணேசமூர்த்தி அவர்களும்.



ஊனமுற்றவர்களுக்கான மூன்று சில்லு சைக்கிள் வழங்கும் நிகழ்வில் Dr. சி.கதிரைவேற்பிள்ளை பாவனையாளர் ஒருவர்க்கு மூன்று சில்லு சைக்கிள் ஒன்றினை வழங்குவதையும் அருகில் திரு. க. ஞானச்சந்திரன் அவர்களையும் காணலாம்.



பிறிதொரு மூன்று சில்லு சைக்கிள் ஒன்றினை ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும் கிராம சேவையாளர் சி.சிவபாலசிங்கமும் பாவனையாளர் ஒருவருக்கு வழங்குவதைக் காணலாம்.



வறுமைக் கோட்டிற்குட்பட்ட பாடசாலை மாணவிக்குரிய துவிச்சக்கர வண்டியினை இளைப்பாறிய மின் அத்தியட்சகர் பொ.இராமலிங்க மூர்த்தி அவர்கள் வழங்குவதையும் அன்றைய நிகழ்விற்கு வருகை புரிந்த நீர்வை மணிஜயா அவர்களும் இளைப்பாறிய ஆசிரியர் க.நவரெத்தினம் அவர்களும்.



பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு இலங்கை வங்கி முகாமையாளர் K.P. ஆனந்த நடேசன் அவர்கள் வழங்கும் நிகழ்வு.




இணுவிலைச் சேர்ந்த செல்வி. இராசதுரை டர்சிகா எனும் மாணவிக்கு நிகழ்வில் கலந்து கொண்ட ஆ.சிறிஸ்கந்த மூர்த்தி அவர்களும் கிராம சேவையாளர் சோ.பரமநாதன் அவர்களும் துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வில் பேரவை உறுப்பினர் கு. அருணகிரிநாதனையும் காணலாம்.



முதியோருக்கான தள்ளுவண்டி ஒன்றினை திரு. க.ஜெயராமக்குருக்கள் அவர்களிடம் ஆசிரியர் ஐ.சண்முகலிங்கம் அவர்கள் வழங்கும் நிகழ்வு.



ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட மூன்று சில்லுச் சைக்கிள் பெற்றுக் கொண்ட பாவனையாளருடன் பேரவை உறுப்பினர்களாகிய திரு. சி.பத்மநாதனும், திரு. ஆ.அருணாசலம் அவர்களும் காணப்படுகின்றார்கள்.



பார்வைக் குறைப்பாடுடையவர் ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வினைக் காணலாம்.




மானிப்பாய் கட்டுடை சனசமூக நிலையம் நடாத்திய வருடாந்த விளையாட்டிற்கான பெறுமதி மிக்க பரிசில்களை வாராந்த நிகழ்விற்கு வருகை புரிந்த திரு. S.தர்மலிங்கம் அவர்கள் வழங்கும் நிகழ்வினைக் காணலாம்.




ஆச்சிரமத்தோடு இணைந்து பாடசாலைச் சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்களை மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் சி. பத்மநாதன் அவர்களும் அவரோடு வருகை புரிந்த திரு. வ.சண்முகநாத முதலி அவர்களும் மாணவி ஒருவருக்கு வழங்கும் நிகழ்வு.




மாணவர்களுக்குரிய கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வில்
ஆச்சிரம சுவாமிகளோடு திரு. சி.பத்மநாதன் அவர்களும் அவரோடு இணைந்து
திரு. வ.சண்முகநாகமுதலி அவர்களும் அவர்கள் வழங்கிய கற்றல்
உபகரணங்களோடு மாணவர்களும் காணப்படுகின்றனர்.




மாணவர்களுக்குரிய கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வில்
ஆச்சிரம சுவாமிகளோடு திரு. சி.பத்மநாதன் அவர்களும் அவரோடு இணைந்து
திரு. வ.சண்முகநாக முதலி அவர்களும் அவர்கள் வழங்கிய கற்றல்
உபகரணங்களோடு மாணவர்களும் காணப்படுகின்றனர்.




ஆச்சிரமத்தால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாதாந்த நிவாரணம் பெறும் ஒரு பகுதி மக்களையும் அவர்களுக்குரிய நிவாரணப் பொருட்களை வழங்கும் தொண்டர்களையும் காணலாம்.



ஆச்சிரமத்தால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாதாந்த நிவாரணம் பெறும் ஒரு பகுதி மக்களையும் அவர்களுக்குரிய நிவாரணப் பொருட்களை வழங்கும் தொண்டர்களையும் காணலாம்.



01-01-2009 அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்களது முதலாம் ஆண்டு ஞாபகார்த்தமாக ஆச்சிரமத்தினால் மேற் கொள்ளப்பட்டுவரும் வைத்திய சேவைக்காகிய புதிய கட்டிடத் தொகுதியின் பெயர்ப் பட்டயத்தினை அமரர் அவர்களது பிள்ளைகள் திரைநீக்கம் செய்தகாட்சி.



அமரர் மகேஸ்வரன் ஞாபகார்த்த வைத்திய சேவைக் கட்டடத்தின் திறப்பு விழாவன்று மங்கள விளக்கேற்றும் காட்சி.



அமரர் மகேஸ்வரனது நினைவாக ஆச்சிரமத்தால் கட்டப்பட்ட வைத்தியசாலைக் கட்டடத் தொகுதியில் மங்கல விளக்கேற்றும் நிகழ்வில் அமரரின் உறவினர்கள்.



அன்றைய நிகழ்விற்கு வருகை புரிந்த அன்பர்கள் மகேஸ்வரன் திரு. உருவப் படத்தின் முன்னால் அவரதம் குழந்தைகளுடன் காணப்படுகின்றார்கள்.




அமரர் தியாகராசா மகேஸ்வரனது முதலாம் ஆண்டு ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழாவின்போது அன்னாரது மனைவி பிள்ளைகளுடன் விழாவிற்கு வருகை புரிந்த அன்பர்களும்.



அமரர் தியாகராசா மகேஸ்வரனது முதலாம் ஆண்டு ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழாவின்போது அன்னாரது மனைவி பிள்ளைகளுடன் விழாவிற்கு வருகை புரிந்த அன்பர்களும்.




ஆச்சிரமத்தில் இடம் பெற்ற மகேஸ்வரனது 31ஆம் நாள் நிகழ்வின்போது சிவசிறீ சோ. தண்டபாணிக தேசிகர் அவர்கள் நினைவுப் பேருரை நிகழ்த்துவதையும் அவரோடு இணைந்து ஆசிரியர் K.கைலைநாதன் அவர்கள் மேடையில் அமர்ந்திருக்கும் நிகழ்வு



அமரரின் 31ஆம் நிகழ்வில் ஆசிரியர் இரா. செல்வடிவேல் அவர்கள் ஆலயத்தில் உள்ள முதியோருக்கு உடுபுடவை வழங்கும் நிகழ்வு.



ஞானச்சுடர் மலர் வெளியீட்டினை சிறப்பிக்க வருகை புரிந்த ஆச்சிரமத்தின் செயற்பாட்டிற்கு ஊன்று கோலாக விளங்கும் அன்பர்கள் வைத்தியசாலைக் கட்டடத் தொகுதியின் முன்புறம் காணப்படுகின்றார்கள்.



ஞானச்சுடர் மலர் வெளியீட்டினை சிறப்பிக்க வருகை புரிந்த ஆச்சிரமத்தின் செயற்பாட்டிற்கு ஊன்றுகோலாக விளங்கும் அன்பர்கள் வைத்தியசாலைக் கட்டடத் தொகுதியின் முன்புறம் காணப்படுகின்றார்கள்.



ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப் பட்டுவருணம் இலவச வைத்திய சேவையின் பத்தாம் ஆண்டு நிறைவில சேவை ஆற்றிய வைத்திய நிபுணர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பூசகர் மாலை அணிவித்து கௌரவிக்கப்படும் நிகழ்வு



ஆலய பூசகர் அன்றைய நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் அவர்கட்கு காளாஞ்சி கொடுத்து கௌரவிக்கும் நிகழ்வில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் அவர்களும் வைத்திய நிபுணர் மா.யோகேஸ்வர தேவரும் காணப்படுகின்றார்கள்.



இலவச வைத்திய சேவையின் 10ம் ஆண்டு நிறைவு நாளில் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் கௌரவிக்கப்பட்ட பண்பாளர்கள் ஒன்று சேர வீற்றிருக்கும் காட்சியினைக் காணலாம்.



வைத்திய சேவையின் நிமித்தம் ஆச்சிரமத்தினால் நோயாளர்களுக்கான இலவசமாக வழங்கப்படும் மருந்து வகைகளையும் மருந்தறையையும் காணலாம்.



வைத்திய சேவையின் 10ம் ஆண்டு நிறைவில் இடம் பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் ஆரம்ப உரையை திரு. கு.அப்பாத்துரை அவர்களும், நன்றியுரையினை ஆச்சிரம பேரவையின் முன்நாள் தலைவர் திரு. சி. நாகலிங்கம் அவர்கள் நிகழ்த்து வதையும் அருகில் சேவையாற்றிய செம்மல்கள் Dr. சி. இராசலிங்கமும் Dr. பொன் சின்னத்தம்பியும் வீற்றிருக்கும் நிகழ்வினையும் காணலாம்.



வைத்திய சேவையின் 10ம் ஆண்டு நிறைவில் இடம் பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் ஆரம்ப உரையை திரு. கு.அப்பாத்துரை அவர்களும், நன்றியுரையினை ஆச்சிரம பேரவையின் முன்நாள் தலைவர் திரு. சி. நாகலிங்கம் அவர்கள் நிகழ்த்துவதையும் அருகில் சேவையாற்றிய செம்மல்கள் Dr. சி. இராசலிங்கமும் Dr. பொன் சின்னத்தம்பியும் வீற்றிருக்கும் நிகழ்வினையும் காணலாம்.

உ

# சிவராத்திரி தினத்தை சமாதான பிரார்த்தனை நாளாக இந்துசமயப் பேரவை பிரகடனம்

## முருகன் புகழ் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் அறிவிப்பு

எதிர்வரும் சிவராத்திரி தினத்தில் நாட்டில் சமாதானம் ஏற்படுத்துவதற்கான பிரார்த்தனை நாளாக பிரகடனம் செய்ய இந்துசமயப் பேரவை தீர்மானித்துள்ளது. இவ்வாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற முருகன் புகழ் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் சிறப்புரை ஆற்றிய இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி. சக்திகிரீவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் ஆதரவில் இடம்பெற்ற இவ்வெளியீட்டு விழாவுக்கு யாழ் செயலக நிர்வாக உத்தியோகத்தர் வே. வீரபத்திரபிள்ளை தலைமை வகித்தார்.

இந்துசமயப் பேரவைச் செயலாளர் தொடர்ந்து பேசும்போது 1985ஆம் ஆண்டும் அதன் பின்பும் இராணுவ நடவடிக்கைகளினால் சந்நிதி முருகன் ஆலயம் சேதமாக்கப்பட்டு ஆலய வளாகம் மயானபூமியாக காட்சியளிக்கின்றது. இதனைப் புனரமைக்கவேண்டிய அவசியத்தை ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளோம். ஆலயம் புனரமைப்பதற்குரிய நடவடிக்கையை ஜனாதிபதி செயலகம் மேற்கொண்டு வருவதாக எமக்குப் பதில் கிடைத்துள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம் போன்ற இரு ஆலயங்களும் வேறு சில ஆலயங்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றது. சேதமாக்கப்பட்டு இருக்கும் ஆலயங்கள் அனைத்தும் புனரமைக்கப்பட்டால்த்தான் இந்த நாட்டிலே சாந்தியும் சமாதானமும் உருவாகும்.

இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைக் குழப்ப இந்துக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். போரினால் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் கொல்லப்படுகின்றார்கள். சிங்கள அரசியல் தலைவர்களும் பௌத்த மதத் தலைவர்களும் இன்று இதனை உணரத்தொடங்கியுள்ளனர். இந்நிலையில் இதனைக் குழப்ப முனைவோரை மனிதநேயம் படைத்த அனைவரும் திரண்டு எதிர்க்கவேண்டும்.

இந்து நிறுவனங்கள் சமூகப் பணியில் மிகுந்த கரிசனையோடு செயல்படவேண்டிய காலம் இது. தற்பொழுது சில இந்து நிறுவனங்கள் இதனைச் செயற்படுத்தி வருவது பாராட்டிற்குரியது.

உலகில் எந்த மூலையில் இந்துக்களுக்கு இன்னல் விளைகின்றதோ அங்கெல்லாம் இந்துசமயப் பேரவை உதவிகளைச் செய்து வருகின்றது. அண்மையில்கூட குஜராத்தில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது பேரவை 1லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் என். ஞானகுமாரன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். ஒலிப்பதிவு நாடாவின் முதற்பிரதியை என். குணரத்தினம், எஸ். வசந்தகுமார், த. இரீமச்சந்திரன், து. விக்னேஸ்வரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

16.02.2001 — உதயன்

உ

# போற்றுதற்குரியவர்கள்...

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல சமய சமூகப் பணிகளை ஆச்சிரமத்தோடு இணைந்த அன்பர்கள் யாவரும் அறிந்ததே. அவ்வகையில் ஆச்சிரமம் மேற்கொள்ளும் அப்பணிகளில் ஒரு சிலவற்றையாவது வருங்கால சந்ததியினரும் அறியும் வகையில் ஆவணப்படுத்தும் நோக்கில் 2007ஆம் ஆண்டு சந்நிதியான் ஆச்சிரமம் சேவைகள்- பணிகள் என்னும் தொகுப்பு ஒன்றின்மூலம் வெளிப்படுத்தி இருந்தோம்.

அப்பணியின் இன்னொரு அங்கமாக சந்நிதியான் ஆச்சிரமம் சேவைகள் பணிகள் பாகம் 11 என்னும் தொகுப்பினை (2008- 2011) வரையிலான காலப் பகுதியில் ஆச்சிரமம் மேற்கொண்டிருந்த சமய, சமூகப் பணிகளை இணைத்துள்ளோம். அத் தொகுப்பினை சந்நிதிவேற் பெருமானின் பாதங்களில் சமர்ப்பிப்பதோடு உங்கள் பார்வைக்கும் நாம் ஆவணப்படுத்தியுள்ளோம். இத்தொகுப்பினை நீங்கள் பார்வையிடும்போது அதன் தரம் மெய்யடியார்களாகிய அனைவருக்கும் புரியும்.

இவ்வகையான செயற்பாடுகளை சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொள்வதற்கு மூலமாக விளங்குபவன் சந்நிதி வேலவன். அவனருள் இன்றி அணுவும் அசையாது என்பது திண்ணம். இந்தக் கோட்பாட்டினை இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தி வருவதனால்தான் இப் பணிகள் எல்லாம் ஒருவிதமான தங்கு தடையின்றி வளர்ந்து கொண்டே போகின்றது என்பது கண்கூடு.


இந்த வகைச் செயற்பாடுகளை நாம் நோக்குமிடத்து ஒரு ஆலமரத்தைச் சூழவுள்ள அதன் விழுதுகள் மரத்தை தாங்கி காலங்காலமாக இருப்பதுபோல ஆச்சிரமத்தின் செயற்பாடுகளுக்கும் விழுதுபோல் விளங்குபவர்கள் ஆச்சிரமத்தோடு இணைந்த அன்பர்கள் என்பதைக் கூறிக்கொள்வதில் நாம் பெருமிதம் அடைகின்றோம். இத்தகைய சமய சமூகப் பணிகளை முன்னெடுப்பதற்கு மூல காரணமாக விளங்குவது ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நித்திய அன்னப்பணியென்றே கூறலாம்.

அந்த வகையில் 1988ஆம் ஆண்டு ஆச்சிரமத்தில் நித்திய அன்னப்பணிக்கு மூதன் முதலாக வித்திட்டவர் கைதடியைச் சேர்ந்த அமரர் த. வேலாயுதன் ஆவார். அவரைத் தொடர்ந்து தவத்திரு முருகேசு சுவாமிகளும் அவரின்மூலம் பல அன்பர்களை இப்பணியில் இணைத்ததோடு, அமரர் தியாகராசா மகேஸ்வரனையும் இந்நேரத்தில் நாம் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக சந்நிதிவேற் பெருமானின் பூரண அருளாட்சி பொலிவு பெற்று விளங்குவதன்மூலம் இத்தகைய பணிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. எல்லாம் அவன் செயல் என்ற எண்ணத்தோடு ஆச்சிரமம் செயலாற்றுகிறது. இப்பணியில் இணைந்து கொண்ட அனைவருக்கும் சந்நிதியானின் பூரணமான அருள் கிட்ட வேண்டும் என்று பிரார்த்தித்து குருவருளோடும், திருவருளோடும் வாழ்த்தி அமைகின்றோன்.

சுபம், சாந்தி

குருபணியில்
செ. மோகனதாஸ்
(மோகன் சுவாமி)


அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்